## December 17, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை (எஃப்டிஐ) 100 சதவீதத்துக்கு உயர்த்த அனுமதிக்கும் மசோதாவுக்கு எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கிடையே மக்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

   i. சட்டம் 1938, காப்பீட்டுச் ஆயுள் காப்பீட்டு நிறுவனச் சட்டம் 1956, காப்பீடு ஒழுங் குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம் 1999 ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வகை செய்யும் 'காப்பீட்டு திருத்தச் சட்டம் 2025 (தி சப்கா பீமா சப்கி ரக்ஷா' என்ற பெயரிலான இந்த மசோதாவை, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிமுகம் செய்தார்.

   ii. அறிமுகம் மசோதா, காப்பீட்டுத் துறையில் தற்போது 74 சதவீதமாக இருக்கும் அந்நிய நேரடி முதலீட்டை 100 சதவீதமாக உயர்த்த அனுமதிப்பதோடு, ஒரு காப்பீடு அல்லாத நிறுவனத்தை காப்பீட்டு நிறுவனத்துடன் இணைக்கவும் வழிவகுக்கும். அவ்வாறு,

   iii. அந்நிய நேரடி முதலீட்டை 100 சதவீதமாக உயர்த்தினாலும், சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர், நிர்வாக இயக்குநர் அல்லது தலைமைச் செயல் அதிகாரி ஆகிய மூன்று உயர் பதவிகளில் ஏதாவது ஒரு பதவியை வகிப்பவர் இந்திய குடிமகனாக இருப்பதை மசோதா கட்டாயமாக்கியுள்ளது.

2. உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் இதுவரை இல்லாத அளவுக்கு நெருங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அதற்காக நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு இணையான பாதுகாப்பு உத்தரவாதம் உக்ரைனுக்கு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

   i. இது குறித்து அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில், உக்ரைன் அமைதி ஒப்பந்தத்தில் நேட்டோவின் '5-ஆவது பிரிவை' போன்ற வலுவான பாதுகாப்பு உத்தரவாதம் உக்ரைனுக்கு அளிக்கப்படும் என்று கூறினர்.

   ii. நேட்டோ கூட்டமைப்பு விதிமுறை 5- ஆவது பிரிவின் கீழ், அதன் உறுப்பு நாடுகளில் எந்தவொரு நாட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டால்,அது 32 உறுப்பு நாடுகளின் மீதும் நடத்தப்படும் தாக்குதலாகக் எடுத்து கொள்ளப்பட்டு, அனைத்து நாடுகளும் பதிலடி கொடுக்க வேண்டும். உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கியும் இத்தகைய பாதுகாப்பைப் பெறு வதற்காகத்தான் நேட்டோவில் இணைய விருப்பம் தெரிவித்திருந்தார். உக்ரைன் மீது ரஷியா கடந்த 2022-ஆம் ஆண்டு படையெடுத்ததற்கு இதுவே காரணமாக இருந்தது.

3. 2025- ஆம் ஆண்டுக்கான சிறந்த டபிள்யூடிஏ-வின் சிறந்த டென்னிஸ் வீராங்கனை விருதை, பெலாரஸின் அரினா சபலென்கா தொடர்ந்து 2- ஆவது முறையாக வென்றார்.

4. கடந்த 1971-இல் பாகிஸ்தான் உடனான போரில் இந்தியாவின் வெற்றியை நினைவு கூரும் தினத்தையொட்டி, அந்தப் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

   i. கடந்த 1971-இல் இந்தியா- பாகிஸ்தான் போரின் இறுதியில் அந்நாட்டின் ராணுவ ஜெனரல் ஏ.ஏ.கான் நியாஸி தலைமையில் 93,000 வீரர்கள் ஆயுதங்களைக் கீழே

போட்டுவிட்டு, இந்தியப் படையினரிடம் சரணடைந்தனர். இது, இரண்டாம் உலகப் போருக்கு பிறகு மிகப் பெரிய சரணடைதல் நிகழ்வாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் போரின் வெற்றி வங்கதேச விடுதலைக்கு வழிவகுத்தது.

ii. இந்தப் போரின் நிறைவைக் குறிப்பதுடன், இந்தியாவுக்காக போரிட்ட வீரர்களின் தியா கத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிச. 16-இல் வெற்றி தினம் (விஜய் திவஸ்) கடைப்பிடிக்கப்படுகிறது.(56-ஆம் ஆண்டு வெற்றி தினம்)

iii. தாய் நாட்டுக்கான சேவையில் தங்களின் இன்னுயிரைத் தியாகம் செய்தமைக்காக உயரிய 'பரம்வீர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்களின் படங்களுடன் கூடிய 'பரம்வீர்' காட்சியகம், குடியரசுத் தலைவர் மாளிகையில் திறக்கப்பட்டது.

iv. 21 பரம்வீர் விருதாளர்களின் படங்கள் இடம்பெற்றுள்ள இந்தக் காட்சியகத்தை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு திறந்து வைத்தார்.

5. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை மாற்ற வகைசெய்யும் 'வளர்ந்த பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்பு சட்ட மசோதா, மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
அம்சங்கள் என்னென்ன?

   i. தண்ணீர்ப் பாதுகாப்பு, முக்கிய ஊரக கட்டமைப்பு, வாழ்வாதாரம் சார்ந்த உள்கட்டமைப்பு உருவாக்கம், மோசமான வானியல் நிகழ்வுகளைத் தணிக்கும் பணிகள் ஆகிய 4 முன்னுரிமைப் பிரிவுகள் மீது புதிய மசோதா கவனம் செலுத்துகிறது.

   ii. தற்போதைய 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் நூறு சதவீத மத்திய மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் புதிய மசோதாவின் படி நிதிச் சுமையை மாநிலங்களுடன் மத்திய அரசு பகிர்ந்துகொள்ளும். புதிய சட்டம் அமலுக்கு வந்த நாளில் இருந்து 6 மாதங்களுக்குள், அந்தச் சட்டப் பிரிவுகளுக்கு ஏற்ப மாநிலங்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

   iii. வேளாண் பருவ காலங்களில் விவசாயப் பணிகள் உச்சகட்டத்தில் இருக்கும்போது, போதிய விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்க வசதியாக, அந்தக் கால கட்டத்தில் மட்டும் 125 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், எந்தப் பணியும் மேற்கொள்ளப்படாது.

   iv. வேலைவாய்ப்பு, வெளிப்படைத்தன்மை, திட்டமிடல், பொறுப்புணர்வை மேம்படுத்துவதுடன் அமைப்பு ரீதியிலான பலவீனத்தை சரி செய்யும் முக்கிய மாற்றமே இந்த மசோதா என்று மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

6. இந்தியா- ஜோர்டான் இருதரப்பு வர்த்தக மதிப்பை அடுத்த 5 ஆண்டுகளில் 5 பில்லியன் டாலராக (ரூ.45,483 கோடி) இரட்டிப்பாக்க வேண்டுமென பிரதமர் நரேந்திர மோடி விருப்பம் தெரிவித்தார்.
இந்தியாவின் உயர் பொருளதார வளர்ச்சியைப் பயன்படுத்தி பலனடையும்படி, ஜோர்டான் நிறுவனங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

i. ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய மூன்று நாடுகளுக் கான 4 நாள்கள் அரசுமுறைப் பயணத்தை தொடங்கிய பிரதமர் மோடி, முதல் கட்டமாக அரபு நாடான ஜோங்டானின் அம்மான் நகரை வந்தடைந்தார். ஜோர்டான் மன்னர் அப்துல்லா பின் அல்-ஹுசைனை சந்தித்த அவர், இருதரப்பு உறவுகள் குறித்து விரிவான பேச்சுவார்த் தையில் ஈடுபட்டார்.

ii. ஜோர்டானின் மூன்றாவது பெரிய வர்த்தக கூட்டாளியாக இந்தியா விளங்குகிறது. இருதரப்பு வர்த்தக மதிப்பை அடுத்த 5 ஆண்டுகளில் 5 பில்லியன் டாலராக இரட்டிப்பாக்க வேண்டும் (தற்போதைய மதிப்பு 2.3 பில்லியன் டாலர்).

iii. இந்தியா - ஜோர்டான் இடையிலான நல்லுறவைப் பிரதிபலிக்கும் வகையில், அம்மான் நகரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருங்காட் சியகத்துக்கு பிரதமர் மோடியை தானே காரை ஒட்டி அழைத்துச் சென்றார் பட்டத்து இளவரசர் அல்-ஹுசைன் பின் அப்துல்லா. இவர், நபிகள் நாயகத்தின் (ஸல்) 42-ஆவது தலைமுறை நேரடி வழித்தோன்றல் ஆவார்.

iv. பிரதமர் மோடி-ஜோர்டான் மன்னர் இடையே நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர்வள மேலாண்மை மற்றும் மேம்பாடு, பெட்ரோ (ஜோர்டான்)- எல்லோரா (இந்தியா) நகரங்கள் இடையே கலாசார மற்றும் சுற்றுலா ஒத்துழைப்பு, எண்மத் தீர்வுகள் பகிர்வு, கலாசார பரிமாற்ற ஒத்துழைப்பு தொடர்பாக 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

v. ஜோர்டானில் இருந்து கிழக்கு ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவுக்கு வந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தலைநகர் ஏடிஸ் அபாபா விமான நிலையத்தில் வந்திறங்கிய அவரை எத்தியோப்பியா பிரதமர் அபி அகமது அலி நேரில் வரவேற்றார். பிரதமர் மோடியின் முதல் எத்தியோப்பியா பயணம் இதுவாகும். இப்பயணத்தில் அபி அகமது அலியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ள பிரதமர் மோடி, அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் உரை நிகழ்த்தவுள்ளார்.

7. பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி), அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (ஏஐசிடிஇ) மற்றும் தேசிய ஆசிரியர்கள் கல்வி கவுன்சில் (என்சிடிஇ) ஆகிய மூன்று அமைப்புகளுக்கு மாற்றாக ஒரே உயர் கல்வி ஆணையத்தை அமைக்க அறிமுகம் செய்யப்பட்ட மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

i. மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மக்களவையில் இதற்கான தீர்மானத்தை அறிமுகம் செய்தார். அதில், 'வளர்ந்த பாரத கல்வி மேற்பார்வை ஆணைய மசோதாவை ஆராய மக்களவை உறுப்பினர்கள் 21 பேர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரை உள்ளடக்கிய கூட்டுக் குழு அமைக்கப்படும்; அந்தக் குழு மசோதா குறித்து ஆய்வு செய்து தனது அறிக்கையை, 2026-ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் பகுதியின் கடைசி நாளில் தாக்கல் செய்யும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

ii. பன்முக முறைப்படுத்துதல் அமைப்புகள் மற்றும் முறைப்படுத்தப்படாத

அனுமதி நடைமுறைகள் காரணமாக உயர் கல்வி நிறுவனங்கள் சந்தித்து வரும் சவால்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த உயர்கல்வி ஆணையம் (ஹெச்இசிஐ) கொண்டுவர முன்மொழியப்பட்டுள்ளது.

iii. இந்த ஆணையத்தின் தலைவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்.

iv. மத்திய பல்கலைக் கழகங்கள், அவற்றின் கீழ் செயல்படும் கல்லூரிகள் மற்றும் ஐஐடி, என்ஐடி, ஐஐஎஸ்சி, ஐஐஎஸ்இஆர், ஐஐஎம், ஐஐஐடி உள்பட மத்திய கல்வி அமைச்சக நிர்வாக வரம்புக்குள் செயல்படும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உயர் கல்வி நிறுவனங்களும் வளர்ந்த பாரத கல்வி மேற்பார்வை ஆணையத்தின் அதிகாரத்தின் கீழ் வரும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டது.

v. உயர் கல்விக்கான ஒற்றை அமைப்பாக நிறுவப்படும் இந்த அமைப்பு, பல்கலைக்கழகங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது, ஒழுங்குபடுத்துவது போன்ற பணிகளையும் மேற்கொள்ளும். ஆனால், கல்வி நிறுவனங்களுக்கு நிதி வழங்கும் பொறுப்பு கல்வி அமைச்சகத்திடமே தொடரவுள்ளது. மருத்துவம் மற்றும் சட்டக் கல்லூரிகள் இந்த அமைப்பின் அதிகார வரம்புக்குள் கொண்டுவரப்படவில்லை.